<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 517/2025</u>

<u>வழக்கு சாட்சி PW-1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்பிரமணியராஜா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இராமசாமி ராஜா | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | சிவகிரி | வயது | : | 67 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Monday of 02.03.2026.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் சிவகிரியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியாது. 08.05.2014 அன்று எங்களுடைய குளத்திற்கு வரும் தண்ணீரை உள்ளாறு, தளவாய்புரம் ஊரைச் சேர்ந்தவர்கள் கரையை வெட்டி அவர்கள் ஊருக்கு எடுத்து சென்றார்கள். நான் பொதுப்பணித்துறை பொறியாளருக்கு புகார் கொடுத்தேன். பொதுப்பணித்துறை அலுவலர்கள் கரையை அடைக்க சென்றார்கள். உள்ளாறு, தளவாய்புரம் ஊரைச் சேர்ந்தவர்கள் அடைக்கவிடாமல் தடுத்தார்கள். பின்னர் பொதுப்பணித்துறை அலுவலர்கள் திரும்ப வந்து விட்டார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் விவசாய சங்க பொறுப்பில் தற்போது இல்லை. சம்பவ காலக்கட்டத்தில் விவசாய சங்க பொறுப்பில் இருந்தேன். எங்களுடைய

குளத்தின் பெயர் காசிங்கப்பேரி குளமாகும். அந்த குளத்திற்கு காட்டாற்று வெள்ளம் மழை பொழிந்தால் மட்டுமே தண்ணீர் வரும் என்றால் சரிதான். அந்த ஆற்றின் பெயர் தளையணை என்றால் சரிதான். தளையணை ஆற்றிற்கும், எங்களுடைய குளத்திற்குமிடையே 5 கி.மீ தூரம் இருக்கும். உடைப்பு ஏற்பட்ட இடம் காட்டிற்குள் இருக்கிறது என்றால் பார்டரில் இருக்கிறது. முறியபஞ்சான் இடம் ஒரு ஆறு என்றால், உடைப்பு ஏற்பட்டதினால் அது ஆறானது. உடைப்பு ஏற்பட்ட பிறகு தான் தண்ணீர் வரவில்லை என தெரிய வந்தது. குளத்தின் மடை திறப்பது பொதுப்பணித்துறை அலுவலர் தான் செய்வார்கள்.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.06 19:18:01 +0530